
# உன் செயலுக்கு நீ காரணம் அல்ல...



இரா. விஜயகுமாரன்

# உன் செயலுக்கு நீ காரணம் அல்ல...

**இரா.விஜயகுமாரன்**

This edition first published on June, 2011 by Kumar Publications

R.Vijayakumaran has asserted his right to be identified as the author of this Work in accordance with Indian Copyright Law.

Copyright © R.Vijayakumaran. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior permission of the copyright owner.

www.vijayakumaran.in

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| அறிவியல் பாதையில், மேன்மையான சமுதாயம் | 6 |
| அனைவரும் சமம் | 16 |
| பாசமும், நட்பும் | 18 |
| என்னை நான் பார்க்கின்றேன்... | 20 |
| உணர்வும், அறிவும் | 22 |
| அனுபவம் | 23 |
| எண்ணங்களும் அதன் பலன்களும் | 24 |
| நம்பிக்கையும் அன்பும் | 25 |
| மதமும், தெய்வமும் | 26 |
| சமுதாயம் எப்படி மாற வேண்டும் | 28 |
| அரசியல் தலைவர்கள் மாறவேண்டும் | 31 |
| நாம் எப்படி வாழுவேண்டும் | 35 |
| அறிவியல் ஆன்மீகம் | 39 |
| நூலின் நோக்கம் | 41 |
| அறிவியல் நீதி | 43 |

# முன்னுரை

அறிவியல் துறையிலும், ஆன்மீக துறையிலும் எனக்கு அதிக ஆர்வம் உண்டு, அதனால் அறிவியல் பற்றியும், ஆன்மீகத்தை பற்றியும் நான் அதிகம் சிந்திப்பது உண்டு. வாழ்நாள் முழுவதும் மனிதர்கள் பணம் சம்பாதிப்பதை தான் வேலையாக வைத்து உள்ளனர். ஆனால் நாம் அப்படி இருக்க கூடாது என்று எண்ணி ஒப்பந்த தொழிலை விட்டுவிட்டு, வாழ்க்கையில் நமக்கு வேறு வேலைகளும் இருக்கும் என்று எண்ணி பல விஷயங்களை பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன்.

ஆப்பிள் கீழே விழுவதை நியூட்டன் அறிவியல் சிந்தனையோடு பார்த்ததால் அவருக்கு அது புவிஈர்ப்புவிசை என்று தெரிந்தது. அதுபோல் தான் எனக்கு ஒரு உண்மை புரிந்தது. நாம் எதை பற்றி யோசித்தாலும் அது புதியதாக இல்லை, இறந்த காலத்தின் நிகழ்வுகளுடன் தொடர்பு கொண்டுதான் இருக்கிறது என்றும், நம்மால் சுயமாக எதையும் சிந்திக்கக் கூட முடியவில்லை என்றால், நாம் செய்பவையும் நமக்கு கட்டுபட்டு இல்லை என்பதையும் புரிந்துகொண்டேன்.

நாம் இந்த உலகில் ஒரு பொருளைபோல் தொடர்வினை அறிவியல் தத்துவத்தின் அடிப்படையில் தான் இயங்குகின்றோம் என்பதை அறிவியலில் ஆர்வம் இருந்ததால் தெரிந்து கொண்டேன்.

ஆன்மீகம் என்றால் அதை நம்ப வேண்டும், அறிவியல் என்றால் அதை புரிந்துகொள்ள வேண்டும், பல ஆயிரம் ஆண்டாக மதம், ஆன்மீக வழியில் பல நீதிகளை சமுதாயத்திற்கு சொன்னாலும்

அனைத்து சமுதாய மக்களும் ஆன்மீகத்தை முழுமையாக நம்பாததால், சமுதாயத்தில் அமைதியையும், நீதியையும் நிலைநாட்ட முடியவில்லை முதல் முறையாக உலகத்திற்கு அறிவியல் மூலமாக சமுதாய நீதிகளையும், ஒழுக்கத்தையும் பற்றி இந்த புத்தகத்தில் எழுதி இருக்கின்றேன் என்று எண்ணுகிறேன். இப்போது அனைத்து மக்களும் அறிவாளிகள் என்பதால் புதிய தத்துவத்தை புரிந்து கொள்வார்கள்.

இந்த அறிவியல் உண்மையை உலகத்திற்கு தெரியப்படுத்தி, மூடநம்பிக்கை, மதவாதம், தீவிரவாதம் ஆகியவற்றை உலகில் இருந்து அகற்றி மேன்மையான சமுதாயம் உருவாக வேண்டும் என்பதற்காக இப்புத்தகத்தை எழுதியுள்ளேன்.

பொதுவாக புத்தகத்துக்கு தான் முன்னுரை இருக்கும், இந்த புத்தகத்தை பொருத்த வரை புத்தகமே முன்னுரை தான்.

# அறிவியல் பாதையில், மேன்மையான சமுதாயம்

எந்த ஒரு செயலும் புதியது அல்ல பழைய செயலின் புதிய வடிவமே. புதியதாக நாம் எதையும் உருவாக்க முடியாது, அது போல் முற்றிலும் அழிக்கவும் முடியாது. தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். நான் பிறந்ததற்கு அப்பா, அம்மா காரணம் அவர்கள் பிறந்ததற்கு அவர்கள் அப்பா, அம்மா காரணம் அப்படி என்றால் நான் இன்று நானாக இருப்பதற்கு பல கோடி ஆண்டுகளுக்கு முன் எது காரணமாக இருந்து இருக்கும் என்று தெரியவில்லை.

நாம் பிறப்பதற்கு நாம் காரணமல்ல, அப்படி என்றால் நாம் செய்கின்ற செயலுக்கும் நாம் காரணமல்ல நம்மை நம் முன்னோர்கள் செய்த செயல் செயல்படுத்துகிறது.

நாமும் இந்த உலகில் ஒரு பொருளை போல்தான், நம்மை ஒரு வெளி சக்தி இயக்கினால் தான் நாம் இயங்க முடியும், நாம் ஒரு விஷயத்தை நினைக்க வேண்டும் என்றாலும் அதற்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். ஒரு தொடர்பும் இல்லாமல் எதை ஒன்றையும் நாம் சிந்திக்ககூட முடியாது.

ஞானியாக இருந்தாலும் சரி, அறிவியல் மேதையாக இருந்தாலும் சரி, தன்னை கடவுளின் அவதாரம் என்று கூறுபவர் என்றாலும் சரி, பாமர மனிதனாக இருந்தாலும் சரி, வெளியுலக தொடர்பும், கடந்தகால தொடர்பும் இல்லாமல், சுயமாக எதை ஒன்றையும் சிந்திக்கவே முடியாது நம்முடைய சிந்தனைகள்

அனைத்தும் வேறொரு நிகழ்வின் மூலம் கிடைத்த சிந்தனைதான். சுயமாக நான் இதை சிந்தித்தேன் என்று யார் ஒருவரும் கூற முடியாது. நம்முடைய சிந்தனைக்கு கூட நாம் காரணம் அல்ல.

நாம் இருகின்ற இடத்தில் இருந்து பூமியை பார்த்தால் பூமி தட்டையாக தான் தெரியும், அறிவு பூர்வமாகவும், உயர்ந்த நிலைக்கும் சென்று பூமியை பார்த்தால் தான் பூமி உருண்டையாக தெரியும், இதுபோல் தான் குறுகிய வட்டத்திற்குள் நாம் இருந்து கொண்டு நம்மை பார்த்தால் நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும் நம்மால் தான் நடக்கின்றது என்பது போல் தோன்றும். எனவே, நம் எல்லா செயலுக்கும் இதற்கு முன் நடந்த செயல்களே காரணம்.

தண்ணீர் தானாக சூடாகாது, வெளியிலிருந்து ஒரு சக்தி அதை சூடுபடுத்தினால் தான் சுடும்.

ஒரு பந்து தானாக உருளாது அதன் மேல் ஒரு வெளி சக்தி உந்துதல் இருந்தால் தான் அது உருளும்.

பந்தின் மீது காற்று அடித்தால் பந்து உருளும், காற்று எப்படி அடிக்கும்? வெப்பத்தின் சுழற்சியால் காற்று சுழன்று கொண்டுள்ளது. இந்த காற்று எப்போது சுழல ஆரம்பித்தது, பல கோடி ஆண்டுகளுக்கு முன், அப்படி என்றால் இப்போது இந்த பந்து நகர்வதற்கு பல கோடி ஆண்டுகளுக்கு முன் காற்றில் ஏற்பட்ட சுழற்சியேதான் இன்று காரணம்.

நாம் செய்கின்ற செயல், நம் வாழ்க்கை அனைத்தும் நாம் இதற்கு முன் செய்த வினை, நம் முன்னோர்கள் செயல்,

தாவரங்களின் செயல்பாடு மற்றும் பூமியில் வேறு சக்தியின் தாக்கம். அதன் அடிப்படையில்தான் நம்முடைய செயல் இருக்கும். நாம் தனித்து இயங்கவே முடியாது. நாம் செய்கின்ற செயல்கள் அனைத்திற்கும் தொடர்வினை தான் அடிப்படையாக இருக்கும். இது தான் அறிவியல் தத்துவம். அதனை தான் நம் முன்னோர்கள் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று கூறினார்கள்.

நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும் இறந்த காலத்தின் தொடர்போடு தான் உள்ளது. அப்படி என்றால் எதிர்காலம் நிகழ்காலத்தின் தொடர்போடுதான் இருக்கும்.

தொடர்வினை தத்துவத்தின் படி எதிர்காலத்தில் நடக்க இருப்பவை அனைத்தும் உறுதி செய்யப்பட்டவையாகவே தோன்றுகிறது.

சில நேரங்களில் தொடர்வினை தத்துவத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடக்க இருப்பதை முன்பே அறிந்து கொள்ளமுடியும்.

நம்முடைய மனம் சில நேரங்களில் வெளியில் ஏற்படும் நிகழ்வை அறியும் வல்லமை பெற்றுள்ளது. இது மனித புலன்களுக்கு உள்ள மற்றும் ஒரு சிறப்பு அதற்கு பெயர் தெய்வசக்தியன்று அது மனிதனின் சிந்தனையின் செயல் திறன். கண், காது, மூக்கை போல்.

வரும் காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்று யாராலும் தெளிவாக கூறமுடியாது ஏனென்றால் நம்மை பலவிதமான

சக்திகள் ஆளுகின்றன. இந்த சக்தியின் கூட்டுப்பலன் எப்போது எப்படி இருக்கும் என்று கூறமுடியாது.

ஒருவன் நன்கு படித்துவிட்டு நல்லவேலைக்கு சென்றவுடன் அந்த செயலுக்கு எல்லாம் நான் தான் காரணம் என்று பெருமை பேசுவான்  மற்றும் ஒருவன் நன்றாக படித்து பட்டம் பெற்றிருப்பான் ஆனால் அவனுக்கு வேலை கிடைக்காமல் மிகவும் கஷ்டத்தில் இருப்பான். அவன் இதற்கு எல்லாம் என் நேரம் சரியில்லை நான் என்ன செய்வது என்று சொல்வான்.

தோற்றவன் சொல்வது தான் உண்மை. அவனால் எதையும் செய்ய முடியாது அவனை சுற்றியுள்ள சூழல் அவனை இயக்கினால் தான் அவன் இயங்க முடியும்.

ஒருவன் படிக்க வேண்டும் என்றால் அவன் ஆரோக்கியமான மாணவனாக இருக்க வேண்டும். அதற்கு அவன் பெற்றோர்கள் ஆரோக்கியமானவர்களாக இருந்தால் தான் இவன் ஆரோக்கியமான குழந்தையாக பிறந்திருந்திருப்பான். நல்ல உணவு, பள்ளி, நண்பர்கள், ஆசிரியர்கள், சூழல் அனைத்தும் கிடைத்தும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் வரவேண்டும். அதுவும் வெளியில் இருந்து கிடைக்கும் அனுபவத்தில் தான் ஒருவனுக்கு நல்ல சிந்தனை வரும். படித்த பிறகு வேலையில் சேர்வதற்கு சேருகின்ற இடத்தில் ஆட்கள் தேவை பட வேண்டும். அதற்கு போட்டி இல்லாமல் இருக்க வேண்டும்.

இப்படி அனைத்தும் வெளியுலகையே சார்ந்து உள்ளது. ஆனால் அந்த வேலைகிடைத்ததும் ஒரு மனிதன் அதற்கு காரணம் நான் தான் என்று நினைக்கின்றான்.

நான் பணக்காரன், நான் அறிவாளி, நான் பலசாலி என்று நான் என்ற சொல்லுக்குள் நாம் வாழக்கூடாது.

நாம் என்று நம்மை அடையாளம் காட்டிக்கொள்ள நமக்கு என்று எதுவுமே இல்லை. நாம் நீர், நெருப்பு, காற்று, மண் ஆகாயத்தால் உருவாக்கப்பட்ட ஒரு கலவையே. இவற்றில் எதை ஒன்றை நம்மிடருந்து பிரித்தாலும் நாம் இல்லை. இந்த உடலே நமக்கு சொந்தம் இல்லை என்றால் இந்த உலகில் வேறு எது நமக்கு சொந்தமாக இருக்க முடியும்!

இந்த உலகில் உள்ள அனைத்து பொருட்கள் உயிர்கள் அனைத்துக்கும் நிலையான உருவம் இல்லை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு பொருளாக உள்ளது. இரண்டு பொருட்களை ஒன்றாக சேர்த்தால் தண்ணீர் அதை சூடாக்கினால் நீராவி. கல், மண், மரம் அனைத்தும் அப்படிதான்.

புவியீர்ப்பு விசையை கண்டுபிடிப்பதற்கு முன்பு வரை மனிதன் தான் நடப்பதற்கு தன்னுடைய திறமை தான் காரணம் என்று நினைத்து இருப்பான். ஆனால் புவியீர்ப்பு விசையை கண்டுபிடித்தவுடன் தான் நடப்பதற்கு புவியீர்ப்பு விசைதான் காரணம் என்ற உண்மையை உணர்கின்றான்.

தான் 56 கிலோ எடை இருப்பதற்கு நான் தான் காரணம் என்பான் அதுவே அவன் நிலவுக்கு சென்றால் 8 கிலோ தான்இருப்பான், இங்கு 56 கிலோ இருப்பதற்கு அவன் காரணம் என்றால் அங்கும் அவன் ஏன் 56 கிலோவாக இருக்க முடியவில்லை? இரண்டுக்கும் காரணம் அவன் அல்ல. அவன்

இருக்கின்ற இடம் தான் அப்படி என்றால் தன்னால் தான் இது நடக்கின்றது என்று தான் நினைப்பது முற்றிலும் மாயையே. நம்மை இந்த உலக அமைப்புதான் இயக்குகின்றது. இது தான் உண்மை.

இந்த உண்மையை நான் புரிந்து கொண்டவுடன் என் மனதில் பல மிக பெரிய மாற்றம் ஏற்பட்டது.

இதை உணர்ந்து கொண்டதற்கு நான் காரணம் அல்ல, இதன் பெருமைக்கு உரியவன் நான் அல்ல.

திறமைசாலிகள் திறமைக்கு அவர்கள் காரணம் அல்ல எனவே புகழுக்கு உரியவர்கள் அவர்கள் அல்ல.

பொருள் படைத்தவனாக இருக்க அவன் காரணம் அல்ல எனவே அவன் பணக்காரன் அல்ல.

ஏழையாக இருக்க அவன் காரணம் அல்ல எனவே அவன் ஏழை அல்ல.

தாழ்ந்த சாதியில் பிறந்ததற்கு அவன் காரணம் அல்ல எனவே அவன் தாழ்ந்தவன் அல்ல.

படிக்காததற்கு அவன் காரணம் அல்ல, எனவே அவன் முட்டாள் அல்ல.

ஆரோக்கியமாக இருப்பதற்கு அவன் காரணம் அல்ல, எனவே அவன் அழகன் அல்ல.

வெற்றி பெற்றததற்கு அவன் காரணம் அல்ல, எனவே வெற்றியாளன் அவன் அல்ல.

தோல்வி அடைந்ததற்கு அவன் காரணம் அல்ல, எனவே அவன் இயலாதவன் அல்ல.

கொலைகாரனுடைய செயலுக்கு அவன் காரணமல்ல எனவே அவன் குற்றவாளி அல்ல.

தொடர்வினை தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, ஒரு தூக்குதண்டனை கைதிக்கு தூக்குத் தண்டனை கொடுப்பது தவறு. காரணம் அவன் செய்த தவறுக்கு அவன் காரணம் அல்ல, அவனை சுற்றி நடந்த சம்பவங்கள் அவன் வளர்ந்த இடம், சூழ்நிலை தான் காரணமாக இருக்க முடியும். எனவே, அவன் மரணதண்டனைக்கு உரியவன் அல்ல. ஆகவே அவன் சமுதாயத்தை மீண்டும் பாதிக்காதபடி சிறையில் அடைத்து வைக்கலாமே தவிர தூக்கு தண்டனை கொடுக்கவே கூடாது. என்பது இந்த தொடர்வினை தத்துவத்தின் அடிப்படையில் நமக்கு தெரியும் உண்மையாகும்.

ஒரு பாத்திரத்தில் ஒரு அரிசி மட்டும் விழும்படி ஒரு ஓட்டை போடவும், அதில் அரிசியை கொட்டவும் இப்போது கீழே ஒன்று அல்லது இரண்டு அரிசி மட்டும் விழும். விழுந்த அரிசிக்கு மட்டும் தான் தலையெழுத்து நன்றாக உள்ளதென்றோ, தன்திறமையால் தான் கீழே விழுந்தது என்றோ அல்லது இதன் ராசியால் தான் என்றோ சொல்லமுடியாது. இந்த அரிசி இருந்த இடம் தான் அதை இயக்கியது. இது போல் தான் இந்த உலகில் நம்மை சூழ்நிலைதான் இயக்குகின்றது.

இறைவனை தினமும் வணங்கும் போது நான் இந்த உலகம் அறிய பெரிய மனிதாக வேண்டும் என்று எண்ணிய எனக்கு தெய்வம் என்று ஒன்றும் இல்லை, என்னுடைய சாதனைக்கு நான் காரணம் அல்ல என்ற உண்மை தத்துவத்தை நான் உணர்ந்த போது மிகவும் அமைதியாகி விட்டேன்.

நாம் வணங்கும் தெய்வங்கள் பல மனிதனாக வாழ்ந்த தெய்வங்கள் என்றால், தற்போது உள்ள அறிவியல் கண்டுபிடிப்புகளை அவர்கள் மனிதனுக்கு அப்போதே கொடுத்து இருக்கலாமே, ஏன் அவர்களால் அது முடியவில்லை அவர்கள் வாழ்கை அனுபவத்தை மட்டுமே பெற்றிருந்தார்கள் அதனால் நமக்கு வாழ்க்கை முறையை மட்டும் கற்பித்தார்கள் எனவே இவர்கள் அனைவரும் நமக்கு குருதானே தவிர தெய்வங்கள் அல்ல.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனைவிட பரிணாம வளர்ச்சியால், தற்போது மனிதன் மிகவும் அறிவாளியாக இருக்கின்றான். எனவே இறைவன் என்ற பெயரில் நாம் அவனை ஒழுங்குபடுத்த தேவையில்லை. எதையும் நேராக சொன்னாலே புரிந்து கொள்வான்.

சிறு வயதில் நம் காலில் முள் குத்தினால் அந்த முள்ளை எடுக்கும்போது பச்சை மரத்தை பார்த்து கொண்டிரு வலிக்காது என்று கூறி கொண்டே முள்ளை எடுத்து விடுவார்கள் நம் கவனம் பச்சை மரத்தின் மீது இருந்தால் நமக்கு வலி தெரியாது.

இது போல்தான் ஆன்மீகமும், நாம் கஷ்டத்தில் இருக்கும் போது இறைவன் மீது பாரத்தை போட்டால் நமக்கு அந்த

கஷ்டம் தெரியாது. இனிமேல் மதம் இல்லை, ஆத்திகம் இல்லை, நாத்திகம் இல்லை, இனி அனைவருக்கும் இயற்கை தான் கடவுள்.

மனிதன் பலவீனமானவன் அதனால் தான் அவன் ஆண்டவன் என்ற ஒன்றை நம்பியே வாழ்ந்து விட்டான் இப்போது ஆண்டவன் இல்லை என்றால் அவன் மனதளவில் ஆதரவு அற்றவனாக ஆகிவிடுவான் எனவே, மனிதனையும் மற்ற அனைத்து உயிர்களையும் வாழவைக்கும் சூரியன், பூமி மற்றும் சந்திரனையும் இனி நாம் தெய்வமாக வணங்குவோம்.

உலகம் தட்டையானது தான் என்றெண்ணி பல ஆயிரம் ஆண்டுகள் நம்பி வாழ்ந்துவந்த மக்களிடம் உலகம் தட்டையல்ல உருண்டை என்றதும், எப்படி தான் நினைத்தது தவறுதான் என்றெண்ணி உண்மையை மக்கள் ஏற்றுக்கொண்டார்களோ அது போல் தான் இதையும் மக்கள் ஏற்று கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

தொடர்வினை தத்துவத்தின் படி இந்த பிரபஞ்ஜத்திற்கு ஒரு போதும் அழிவு இல்லை தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் அது போல் ஆரம்பம் என்று ஒரு நிலை இல்லை அப்படி என்றால் ஆதி மூலம் என்று ஒன்று இல்லை உயிர் என்ற வார்த்தையை போல் ஆதிமூலம் என்ற வார்த்தையும் பொருள் அற்ற கற்பனை வார்த்தையே.

இந்த அறிவியல் தத்துவம் நமக்கு உணர்த்துவது மந்திரத்தால் மாங்காய் விழாது, வெளி உலகத்தையும். சமுதாயத்தையும் சார்ந்துதான் நம் வாழ்க்கை உள்ளது. இந்த சமுதாயத்துக்கு இன்று நாம் நல்லது செய்தால்தான் நாளை நாமும் நம்

தலைமுறைகளும் நன்றாக இருக்கும்.
போதனை அல்ல, மந்திரம் அல்ல என்னுடைய கருத்தும் அல்ல இது அறிவியல்.

நாம் சென்னையில் இருந்தால் தான் சென்னையிலிருந்து புறப்பட முடியும், நெய்வேலியில் இருந்துக்கொண்டு சென்னையிலிருந்து புறப்படுவது எப்படி சாத்தியம். இது தான் தொடர்வினையின் அறிவியல் தத்துவம் இந்த தத்துவத்தின் அடிப்படையில் தான் உலகம் இயங்குகிறது.

# அனைவரும் சமம்

மனிதன் அனுபவத்தால் (அறிவால்) உயர்ந்தவன். தாழ்ந்தவன் என்று பிரிக்க முடியாது ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியான அனுபவங்கள் உள்ளன.

தன்னை பெரிய அனுபவம் வாய்ந்தவன் என்று கூறும் 90 வயது கடந்த மனிதனுக்கும் ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவத்தை அவருக்கு கொடுக்கின்றது. எனவே அனுபவத்தால் நான் நிறைவு பெற்றேன் என்று யாரும் கூறுவதற்கு இல்லை.

எந்த ஒரு மனிதனின் முழு அனுபவத்தையும் யார் ஒருவரும் தன் அனுபவத்தோடு சேர்த்து பெற முடியாது. அவரவர்களுக்கு அவரவர் துறையில் அல்லது வாழ்க்கை முறையால் அனுபவம் இருக்கும். அப்படி என்றால் எந்த விதத்திலும் அவனைவிட அனுபவம் உள்ளவனாக முடியும்! வேறு ஒரு துறையில் வேறு சூழ்நிலையில் ஒருவருக்கு அனுபவம் இருக்குமே தவிர பிறர் அனுபவத்தையும் உள் அடக்கியவன் நான் என்று யாரும் கூற முடியாது. எனவே யாரும் மற்றவரை விட அறிவாளி என்று கூறுவது தவறு. அது நமக்கு குருவாக இருந்தாலும் சரி, எனவே அனைத்து மனிதனும் சமமே, தெய்வம். தெய்வ பிறவி என்று எந்த மனிதனும் இல்லை.

அனைத்து மனிதனும் சமம் என்ற சிந்தனை தான் மேன்மையான சமுதாயத்தின் உயிர் மூச்சு அனைவரும் சமம் என்ற சிந்தனை இருந்தால் யாரையும் யாரும் அடிமை படுத்தமாட்டோம். நமக்கு கீழ் அடிபணிய செய்ய மாட்டோம். அடிமை இல்லாத

சமுதாயத்தில் புரட்சி, கிளர்ச்சி இருக்காது. இதனால் அனைவரும் பாதுகாப்பான வாழ்கையை வாழலாம்.

நம்மில் பலர் நம்முடைய சொந்த வேலையை செய்வதற்கு உதவி ஆள் என்ற பெயரில் அடிமைகளை வைத்து உள்ளோம். நமக்கு உதவுபவர் யாராக இருந்தாலும் தெய்வத்திற்கு சமம்.

# பாசமும், நட்பும்

ஒருவரிடம் நாம் பழகும் போது பாசத்துடனும், அன்புடனும், உண்மையான நட்புடனும் பழகும் போது, நமக்கு எப்போது எல்லாம் உதவி தேவையோ அப்போது எல்லாம் அவர்களிடம் இருந்து நமக்கு உதவி கிடைக்கும். இது தான் அன்பு, நட்பு, பாசம் இதற்கு பெயர்தான் பலனை எதிர்பார்க்காமல் நம் கடமையை செய்தல், அதாவது நல்ல மகனாக, சகோதரனாக, கணவனாக, தந்தையாக, நண்பனாக நாம் நம் கடமையை செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் வாழ்பவர்கள் உதவியை எதிர்பார்த்து அன்பு காட்டுவது இல்லை. ஆதனால் அவருக்கு உதவிகள் தானாக வரும்.

ஆனால் பலர் இப்போது தனக்கு உதவி வேண்டும் என்பதற்காக, பாசமாகவும், அன்பாகவும், நட்பாகவும் பிறரிடம் இருப்பது போல் நடந்து கொள்வார்கள். இதன் அடிப்படையில் அவர்களுக்கும் பிறரிடமிருந்து உதவிகள் கிடைக்கின்றன. அதன் மூலம் இவர்களும் வாழ்கின்றார்கள்.

ஒரு கோழி தன்னுடைய குஞ்சை எவ்வளவு பாதுகாப்பாக வளர்த்தாலும், அதை இயற்கை அது அதன் வேலை என்கின்றோம்.

ஆனால் நாம் நம்பிள்ளைகளை வளர்த்தால் கூட நான் அப்படி வளர்த்தேன், இப்படி வளர்த்தேன் என்றும் என்னால் தான் நீ இந்த நிலைக்கு உள்ளாய் என்றும் உறவை களங்கபடுத்தி விடுகின்றோம்.

உண்மையான அன்போடு வாழ்பவர்கள் உணர்வோடு வாழ்க்கையை வாழ்கின்றார்கள். அன்பு உள்ளது போல் நடித்து வாழ்பவர்கள் உணர்வு இல்லாமல் வாழ்க்கையை நகர்த்துகின்றார்கள். உணர்வோடு வாழ்ந்தால் தான் வாழ்க்கை உணர்வின்றி வாழ்ந்தால் அது இயந்திர தன்மை.

# என்னை நான் பார்க்கின்றேன்...

நான் என்று சொல்லும் இந்த உடம்பு, இந்த நான் ஆவதற்கு முன்பு நீர், காற்று, மண் என்று பல அணுக்களாக இந்த உலகில் பல இடங்களில் இருந்திருக்கும். அது தான் இப்போது நான்.

இந்த நான் வாழ்ந்த பிறகு மீண்டும் நீர், காற்று, மண் என பல அணுக்களாக இந்த உலகில் பல இடங்களில் இந்த நான் சென்று கலந்துவிடும். இது இயற்கையின் சூழற்சி, இது தான் வாழ்க்கை.

வாழ்க்கை வாழ்வதற்கு தான் கஷ்டங்களை அனுபவிக்க அல்ல உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை இது தான் வாழ்க்கைக்கு தேவை. இது நமக்கு முழுமையாக கிடைத்தால் நாம் வாழ்ந்ததாக பொருள். இந்த மூன்றையும் பெற நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். தேவையான அளவு, அதிகம், உழைத்தால் நமக்கு கஷ்டம், குறைவாக உழைத்தால் சமுதாயத்துக்கு பாரம், அளவாக உழைத்தால் இருவருக்கும் நன்று. இதை பெற்ற பிறகு மரியாதை, மதிப்பு, பதவி, பாராட்டு என்று ஏதோ ஒரு இனம் புரியாத இன்பத்துக்கு ஆசைப்பட்டு நான் என்ற வலையில் சிக்கிக் கொள்ள கூடாது.

இயற்கை நமக்கு அனைத்து செல்வங்களையும் கொடுத்தும் நான் என்ற வலையில் நாம் சிக்கி கொண்டு கஷ்டமான, துயரமான வாழ்கையை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். நம்மை போல் இந்த பூமியில் நீராகவும், காற்றாகவும்,

மண்ணாகவும் கலக்க போகும் இவனிடம் இருந்து நமக்கு எதற்கு பாராட்டு, பதவி, மதிப்பு என்று எண்ணி அமைதியான உண்மையான வாழ்க்கையை வாழ்வோம்.

# உணர்வும், அறிவும்

உணர்வும், அறிவும் மனிதனுக்கு இரண்டு கண்கள் போன்றது. உணர்வு என்பது அறிவுக்கு அப்பாற்பட்டது. உணர்வு என்பது அன்பு, கோபம், சந்தோஷம், துக்கம், பொறாமை போன்ற உணர்ச்சிகளின் வெளிபாடுகள் இந்த உணர்ச்சிகளுடன் பிண்ணி பிணைந்து வாழ்ந்தால் தான் வாழ்க்கை என்று பொருள்.

அறிவின் மூலம் உணர்வை ஒழுங்குபடுத்தி வாழ்வதால் தான் நாம் மிருகத்திடமிருந்து வேறுபட்டு வாழ்கின்றோம். விலங்குகளிடமும் தாய்பாசம், அன்பு, கோபம், சந்தோஷம், துக்கம் போன்ற உணர்வுகள் இருக்கின்றன. ஆனால், அறிவால் அதை ஒழுங்குபடுத்தாததால் அது மிருகத்தன்மையுடன் உள்ளன. மனிதனை  அடிமைபடுத்தினால் அடிமைப்படுத்துபவன் உயர்ந்தவன் அல்ல மிருகம்.

அறிவையும், உணர்வையும் சரியாக கையாண்டால் தான், வாழ்க்கை இன்பமாக இருக்கும், உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் மிருகமாகிவிடுவோம். அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் இயந்திரமாகிவிடுவோம். இரண்டையும் சரியாக கையாண்டால் தான் மனிதனாக வாழமுடியும்.

# அனுபவம்

அனுபவம் இல்லாமல் இன்பத்தையும், துன்பத்தையும் உணரவே முடியாது, எனவே நாம் கடந்து வந்த பாதைகள் இன்பமாக இருந்தாலும் சரி துன்பமாக இருந்தாலும் சரி இறந்தகாலத்தின் அனுபவம் இல்லாமல் இன்றைய வாழ்க்கை வாழ்வதற்கு சாத்தியமே இல்லை. எனவே ஒருவருடைய அனுபவம் மற்றவர்க்கு தன் அனுபவமாக மாறாது.

தான் இனிப்பு சாப்பிட்டால் தான் அந்த அனுபவத்தை உணரமுடியும் அதை அனுபவிக்கவும் முடியும். தான் சாப்பிட்டு விட்டு மற்றவர்க்கு அந்த இன்பதை எப்படி கொடுக்க முடியும், எனவே வாழ்க்கையை ஒவ்வொருவரும் வாழ்ந்தால் தான் முழுமை அடைகின்றது.

ஒருவர் மீது மிகவும் அன்பு கொண்டு, வழிகாட்டுதல் என்ற உணர்வில், தான் ஒன்றை அனுபவித்துவிட்டு அதில் ஒன்றும் இல்லை. வேறு விஷயத்துக்கு நாம் செல்லலாம் என்று அவரை அழைத்து வந்துவிட்டு இதிலும் ஒன்றுமில்லை என்று நாம் அவரை வேறு இடத்துக்கு கொண்டு சென்றால் பல நிகழ்வுகளின் அனுபவத்தையும், வாழ்க்கையும் அனுபவிக்காமல் அவர் வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். ஆனால், நாம் மட்டும் வாழ்ந்த அனுபவத்தை பெற்று இருப்போம். எனவே, ஒவ்வொருவரும் வாழ்க்கையை வாழ்ந்தால்  தான் உணரமுடியும். ஒவ்வொருவருடைய அனுபவமும் மற்றவர் வாழ்க்கையாக ஆகாது.

# எண்ணங்களும் அதன் பலன்களும்

நம் மூளையின் செயல்பாட்டால் உருவாகின்ற எண்ணத்திற்கும், சிந்தனைக்கும், ஒரு செயல்திறன் இருக்கின்றது. இதை அனுபவத்தால் உணரமுடியும் இது ஒரு உறுப்பின் செயல்திறன்.

நம்மை ஒருவர் வாழ்த்தினால் நாம் நன்றாக இருப்போம் நாம் மற்றவரை வாழ்த்தினால் அவர்கள் நன்றாக இருப்பார்கள் என்பது உண்மைதான். அதன் அடிப்படையில் நாம் மற்றவருக்கு நல்லது செய்ய வேண்டும், மற்றவர்களை துன்புறுத்த கூடாது ஒருவருக்கு நாம் நன்மை செய்தால் அதன் பலன் கண்டிப்பாக நமக்கு கிடைக்கும். அது மட்டுமே நமது வாழ்க்கையை செம்மை ஆக்காது. அதனுடைய நன்மை எவ்வளவோ அது நமக்கு கிடைக்கும்.

எனவே நம் எண்ணம், சிந்தனை சுத்தமாகவும், நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் இருந்தால் நமக்கு நல்லது.

கண்திஷ்டி பட்டுவிடும் என்பதும் இந்த எண்ண அலைகளின் தாக்கம் தான்.

இதனால் தான் தியானமிருக்க சொல்கின்றார்கள் தியானம் இருந்தால் எண்ணம் சுத்தமாக இருக்கும். எண்ணம் சுத்தமாக இருந்தால் நடப்பவை நல்லதாக நடக்கும்.

# நம்பிக்கையும் அன்பும்

நாம் சிறுவயதில் அனைவரிடமும் அன்பாகவும் உண்மையாகவும் பழகியிருப்போம். அப்போது வாழ்க்கை சந்தோஷமாக இருந்திருக்கும் அந்த காலம் நம் வாழ்க்கையின் பொற்காலம் என்று சொல்வோம். அப்படி என்றால் எதையும் எதிர்பார்க்காமல் மற்றவரிடம் அன்பு காட்டினால் வாழ்க்கை இனிமையாக இருக்கும். இதனால் தான் சிறு வயது நண்பர்களிடம் நாம் மிகவும் அன்பாக இருப்போம். இது போல் உலகம் அறியாத வயதில், சரியான வயதில் திருமணமான தம்பதிகளும் மிகவும் அன்பாக இருப்பார்கள்.

தெய்வத்தை வணங்கும் போது நாம் சந்தோஷமாகவும், அமைதியாகவும் இருக்கின்றோம். தெய்வம் இருந்தாலும் சரி, இல்லை என்றாலும் சரி அந்த செயல் அமைதியை கொடுக்கின்றது. அதனால் தான் தெய்வத்தை வணங்குகின்றோம். அதுபோல் தான் ஒருவரிடம் உண்மையான அன்பு செலுத்தினால் தெய்வத்தை வணங்கியதில் கிடைத்த சந்தோஷத்தை விட அதிகம் கிடைக்கும்.

ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கை வைப்பதும் அன்பு காட்டுவதும் இயல்பாகவே இருக்க வேண்டும். இது ஒரு மனிதனின் சந்தோஷத்திற்கு ஆணிவேராகும்.

# மதமும், தெய்வமும்

மதம் மனிதனுக்காக தான், தெய்வத்திற்காக அல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கல்வி இல்லை, மதம் தான் கல்வி, மதம் மனிதனுக்கு ஒழுக்கத்தை போதிப்பதற்கு உலகின் பலபகுதிகளில் அங்குள்ள சூழல்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது தான் மதம்.

மதம் தெய்வத்தை வணங்குவதற்கு உருவாக்கவில்லை மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும் என்பதற்காகதான்.

நாட்டுக்கு நாடு தேசிய கொடி இருப்பது போல் அந்த அந்த மதத்திற்கும் சின்னமான ஒரு தெய்வத்தை வைத்து கொண்டார்கள். அது மதத்தின் குறியீடாகும். நாளடைவில் கொள்கையை விட்டுவிட்டார்கள், குறியீட்டை தெய்வமாக கொண்டார்கள்.

மதம் தெய்வத்தை சார்ந்து இல்லை, கொள்கையை சார்ந்துள்ளது. கொள்கை அந்த அந்த நாட்டு சூழலை, மக்களை சார்ந்துள்ளது.

அரபு நாடுகளில் உள்ள இஸ்லாமிய மதம் பல பெண்களை ஆண்கள் மணந்து கொள்ளலாம் என்று சொல்கின்றது. அரபு நாடு வெப்ப பகுதியாகும், அங்கு பெண்கள் பிறப்பு விகிதம் அதிகம் அப்போது இருந்திருக்கலாம் அதற்கு ஏற்றார் போல் அவர்கள் மதம் அவர்களை வழி நடத்துகின்றது. மதக் கொள்கை நாட்டையும், மக்களையும் சார்ந்தது, தெய்வத்தை அல்ல.

எனவே ஒவ்வொருவரும் தன் தாய் நாட்டின் மதக் கொள்கையே பின்பற்றி வாழ்வது தான் பொருத்தமாக இருக்கும்.

# சமுதாயம் எப்படி மாற வேண்டும்

தொடர்வினை தத்துவம் அறிவு சார்ந்த, அனுபவத்தால் உணர்ந்த உண்மை தத்துவம், இது மொழி, மதம், நாடு கடந்து, பிரபஞ்ச தத்துவம்.

முதலில் இந்த தத்துவத்தின் படி நீதி அரசர்கள் தான் மாறவேண்டும், ஆம் அவர்கள் தான் சமுதாயத்தின் நீதியை காக்கின்றார்கள் அவர்களிடம் இருந்து இந்த மாற்றம் ஆரம்பித்தால் ஒரு தனிமனிதனையும் இந்த தத்துவம் சென்றடையும், தனிமனிதன் மாறினால் சமுதாயம் மாறிவிடும்.

தூக்கு தண்டனை கைதியாக இருந்தாலும் சரி அவர் செய்த தவறுக்கு அவர் காரணம் அல்ல, அவரை உருவாக்கிய சமுதாயம் தான் காரணம். சமுதாயத்தை அரசாங்கம் தான் சீர் செய்ய வேண்டும், அரசாங்கம் தன் மீது தவறுகளை வைத்து கொண்டு ஒரு தனி மனிதனுக்கு தண்டனை கொடுக்க கூடாது. எனவே தண்டனைக்கு உரியவர்கள் குற்றவாளிகள் அல்ல சமுதாயம் தான் சமுதாயத்துக்கு தண்டனை கொடுக்க முடியாது எனவே சமுதாயத்தை நல் வழிக்கு மாற்ற வேண்டும்.

தெய்வத்தை முழுமையாக நம்பும், தெய்வ நம்பிக்கை உடைய நீதிபதியிடம், கொலை குற்றம் சம்பந்தப்பட்ட ஒரு குற்றவாளி இந்த கொலையை நான் செய்யவில்லை இதை தெய்வம் தான் செய்தது அதை நான் பார்த்தேன் என்றால் அதை அவர் நம்புவாரா! நம்பமாட்டார் காரணம் அவர் உணர்வுக்கு

முக்கியத்துவம் கொடுக்கவில்லை, அறிவுக்குதான் முக்கியத்துவம் கொடுப்பார். அவர் அறிவு அதை உண்மை என்று எடுத்து கொள்ளாது. நாம் தெய்வத்தை வணங்கினாலும் அறிவால் தான் எது சரி, எது தவறு என்று யோசிக்கின்றோம். அதுபோல் ஒருவன் தவறாக நடப்பதற்கு அவன் தான் முழுகாரணம் என்று எண்ணாமல், தவறை மட்டும்தான் அவன் செய்தான் அதற்கான காரணம் என்ன என்று ஆராய வேண்டும். ஆராய்ந்தால் அதற்கு காரணம் சமூதாய சூழலே என்று புரியும்.

தவறு செய்பவன் குற்றவாளி அல்ல சமுதாயத்தால் பாதிக்கபட்டவன், சமுதாயத்தால் கெடுக்கப்பட்டவன், அவனை சரி செய்வது தான் அரசு மற்றும் சமுதாய கடமை அவனை சரி செய்ய முடியாத அளவுக்கு பழுதாகிவிட்டான் என்றாலும் அவன் தண்டனைக்கு உரியவன் அல்ல. அவன் சமுதாயத்தை பாதிக்காத வண்ணம் சிறையில் அடைத்து வைக்கலாம், மனிதநேயத்துடன் அவனும் சிறையில் வாழ வேண்டும் தண்டனை என்ற வார்த்தையை நீதிதுறை அதன் அகராதியில் இருந்து எடுக்க வேண்டும்.

நாம் காரில் பயனிக்கும் போது டயர் பஞ்சராகிவிட்டால் பழுதாகிவிட்டது என்று தான் சொல்வோம் கார் தவறு செய்துவிட்டது என்று எண்ணமாட்டோம். கார் டயர் பஞ்சர் ஆவதற்கு பல காரணம் உண்டு நாம் சரியாக காரை இயக்காதது. ரோட்டில் ஆணி இருந்திருக்கலாம், டயரை சரியாக தயாரித்து இருக்க மாட்டார்கள். ரோட்டை பழுதுப்பார்க்காதது, இயற்கையில் வெப்பம் அதிகமாக இருந்தது, டயர் பஞ்சராகாமல் இருக்கும் அளவுக்கு தொழில் நுட்பம் வளராதது. இது போல் பல உள்ளது. ஒரு சிறிய நிகழ்வுக்கு பல காரணங்கள் பொறுப்பாகும் போது, எந்த ஒரு

தவறையும் ஒரு தனிமனிதன் மேல் திணித்துவிட்டு சமுதாயம் தப்பித்துவிடக்கூடாது. குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பதால் குற்றம் குறையாது சமுதாயம் மாறினால் தான் குற்றம் குறையும்.

இந்த சிந்தனைதான் சமுதாயத்தை நல் வழிக்கு மாற்றும்.

# அரசியல் தலைவர்கள் மாறவேண்டும்

தொடர் வினை தத்துவத்தின் அடிப்படையில் பார்த்தால் சாதி, மதம், மொழி, நாடு வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் ஒன்றே. அதன் அடிப்படையில் தான் ஜனநாயக முறைபடி அரசு நடக்கிறது. ஆனால் அதில் முழுமையாக ஜனநாயகம் இல்லை அதனால் தான் தீவிரவாதம், போராட்டம் தொடர்ந்து கொண்டுள்ளது.

உயர் பதவிகளில் உள்ள அரசியல் தலைவர்களிடம் இருந்து நான் என்ற எண்ணம் போக வேண்டும். நான், என் சாதி, என் மதம், என் மொழி, என் மாநிலம், எனது என்ற உணர்வு மேல் ஓங்கி இருந்தால் அது மிருகநிலை ஆம், நான் என்ற உணர்வு மேல் ஓங்கி அறிவு தாழ்ந்து இருந்தால் அது மிருக நிலை, இரண்டும் சமமாக இருந்தால் அது மனித நிலை, ஆம், நான் என்ற எண்ணத்தில் இருந்து நாம் என்ற மனித நிலைக்கு நாட்டை ஆளும் உயர் பதவியில் இருக்கும் அரசியல் தலைவர்கள் வந்தால் போதும் நாட்டில் உள்ள மாநிலங்கள், மொழிகள் அனைத்துக்கும் சம அந்தஸ்து கிடைக்கும். ஒரு தனி மனிதனுடைய கருத்தும் தன் தாய்மொழியின் வாயிலாக மத்திய அரசை வழி நடத்த வேண்டும். இந்தியா என்பது ஒரே நாடு அல்ல பல பிராந்தியங்களின் கூட்டு தான் இந்தியா ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப்படுத்துவதற்கு முன் ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி பிராந்தியங்களாக தான் இருந்தன. ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப்படுத்திய பிறகு

தான் பாக்கிதானையும் சேர்த்து நாம் ஒரே நாடாக இருந்தோம். அப்படி என்றால் இந்தியா என்ற ஒரு நாடு ஆங்கிலேய காலத்திற்கு முன் இல்லை, பல பிராந்தியங்கள் கூட்டுதான் இப்போது உள்ள நம் இந்தியநாடு. ஒவ்வொரு பிராந்தியங்களிலும் ஒவ்வொரு மொழி தாய்மொழியாக இருக்கும்போது இந்திய ஆட்சி மொழியாக எப்படி இந்தி வந்தது? இந்திய ஆட்சி மொழி என்றால் பிராந்திய மொழிகள் அனைத்தும் இந்திய ஆட்சி மொழியாக தான் இருந்திருக்க வேண்டும். அப்போது உள்ள வடமாநிலத்தை சேர்ந்த அரசியல் தலைவர்கள் நான் என்ற எண்ணத்தில் செயல்படாமல், நாம் என்ற உணர்வுக்கு முக்கியத்தும் கொடுத்திருந்தால் அனைத்து பிராந்திய மொழியும் சமமாக தெரிந்திருக்கும்.

தாய்மொழியில் உணர்வுகளை வெளிப்படுத்தமுடியும் பிற மொழிகள் எதுவாக இருந்தாலும் அது தகவல் தொடர்புக்குதான் உலகம் முழுவதும் பயன்படுத்தும் ஆங்கிலத்தையே நம் நாட்டின் தகவல் தொடர்புக்கு பிரதான மொழியாக வைத்துக் கொள்ளலாம். இதனால் பிராந்திய மொழிகள் வாழும் அத்துடன் சேர்ந்து நம் உணர்வுகளும் வாழும்.

தகவல் தொடர்புக்கு என்று ஹிந்தியை தாய்மொழி அல்லாத மாநிலத்தை சேர்ந்தவர்கள் ஏன் மூன்று மொழிகளை கற்க வேண்டும், உலகம் முழுவதும் பயன்படுத்தும் ஆங்கிலத்தை மட்டும் நம் தகவல் தொடர்புக்கு இந்தியர் அனைவரும் பயன்படுத்திக் கொண்டால் உலக அளவில் அனைத்து மாநிலத்தவரும் தகவலை பரிமாறிக் கொள்ளமுடியும் அல்லவா?

மொழி பிரச்சனையை போல் நம் நாட்டில் பல பிரச்சனைகள் உள்ளன. அதனை நான் என்ற உணர்வு இல்லாமல் நாம் என்ற உணர்வோடு அரசியல் தலைவர்கள் அதை அணுக வேண்டும்.

சாதி, மதம் சார்ந்த அரசியல் கட்சிகள் நாட்டில் இருக்ககூடாது. ஒவ்வொரு மனிதனும் சமம்தான் என்ற உணர்வுள்ள அரசியல் கட்சிகள் தான் இருக்க வேண்டும்.

தொடர்வினை தத்துவத்தின்படி நானும், பாமரனும் ஒன்று தான் என்று உயர் பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் நினைக்க வேண்டும். தன்னிடம் பணிபுரியும் ஊழியர் முதல் உயர் அதிகாரிகள் வரை நானும் நீங்களும் சமம் தான் என்ற உணர்வோடு பழக வேண்டும். இப்படி அவர் நடந்தால், அதிகாரிகளும் ஊழியர்களிடம் கண்ணியமாக நடந்து கொள்வார்கள். அப்போது சமுதாயத்தில் அனைவரும் ஒன்றுதான் என்ற நிலை உருவாகும். இதனால் குற்றம் நடக்காது. தொடர்வினை தத்துவத்தின் படி உயர்பதவியில் இருப்பவர்கள் நாம் லஞ்சம் வாங்கினால் அது சமுதாயத்தை பாதிக்கும், சமுதாயத்தால் நம்மையும் நம் சந்ததிகளையும் பாதிக்கும் என்று எண்ணி நேர்மையான நிர்வாகத்தை நடத்த வேண்டும். நேர்மையான நிர்வாகம் நடந்தால் மக்களும் நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் இருப்பார்கள் மனிதனுக்கு மனிதனிடமிருந்து பாதுகாப்பு என்று நிலை மாற வேண்டும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் எங்கள் கிராமத்து வீட்டிற்கு பூட்டு இல்லை, மாடு, ஆடு வீட்டுக்குள் செல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்கு தான் கதவு இருக்கும், மனிதனுக்கு பயந்து யாரும் வீட்டுக்கு பூட்டு போட்டது இல்லை அப்போது எல்லாம் ஆடு, மாடுக்கு பயந்து தான் வீட்டை சுற்றி

வேலிபோட்டு இருப்பார்கள். இப்போது மனிதர்கள் மிருகத்தைபோல் ஆகிவிட்டார்கள் அதனால் மனிதன் தாண்டாதவாறு ஏழு அடி உயரம் மதில்சுவர் வைத்து அதில் கண்ணாடியையும் குத்தி வைக்கின்றார்கள், சமுதாயம் அமைதியாக இருந்தால் தான் நலமுடன் நம் சந்ததிகளும் பாதுகாப்பாக 7 அடி சுவர் இல்லாமல் வாழ முடியும், போராட்டம் இல்லாமல் அனைவரும் அவர்கள் உரிமை அவர்களுக்கு கிடைக்க வேண்டும். இது தான் உண்மையான ஜனநாயகம். போராட்டம் பிரிவினையை ஏற்படுத்தும் போராட்டம் செய்கின்ற சூழலை மக்கள் மீது அரசியல்வாதிகள் திணிக்க கூடாது.

உயர் பதவிக்கு வரும் அரசியல் தலைவர்கள் நான் இந்த நாட்டை ஆளுகின்றேன் என்ற எண்ணத்தில் செயல்பட கூடாது. நான் இந்த நாட்டை நிர்வாகம் செய்கின்றேன் என்றுதான் எண்ண வேண்டும். ஜனநாயகத்தில் யாரும் யாரையும் ஆளுமை செய்ய கூடாது. ஆட்சி என்ற வார்த்தை ஜனநாயக நாட்டில் அகற்றப்பட வேண்டும்.

# நாம் எப்படி வாழவேண்டும்

நம்மை வெளிசக்தி இயக்கினால், வெளிச்சக்தியை நாம் இயக்க முடியும், நம்மை நாமே இயக்கிக்கொள்ள முடியாது, பிறருக்கு நாம் சந்தோஷத்தை ஏற்படுத்தலாம், பிறர்தான் நமக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தமுடியும் பிறர் உதவி இல்லாமல் நாம் சந்தோஷமாக இருக்கமுடியாது, பிறரை நாம் தூக்கமுடியும், அவர் நம்மை தூக்க முடியும் ஆனால் நாம் நம்மை தூக்கிக்கொள்ள முடியாது. அதற்கு தான் சமுதாயத்துடன் நாம் நண்பர்களாக வாழ வேண்டும். சமுதாயம் இல்லாமல் நாம் வாழ முடியாது. நம்முடைய வாழ்க்கையில் நாம் பாதி, சமுதாயம் பாதி இரண்டும் ஆரோக்கியமாக இருந்தால் வாழ்க்கை இனிமையாக இருக்கும்.

வாழ்க்கையை நாம் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக நமது முன்னோர்கள் நமக்கு பலகருவிகளை கொடுத்துள்ளார்கள் அவற்றில் ஒன்று, கெட்டதை பார்க்காதே, கெட்டதை கேட்காதே என்று கூறியுள்ளார்கள், இந்த எளிமையான கருவியை நாம் நம் வாழ்க்கையில் பயன்படுத்தினால் போதும் நம் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் காரணம் நம் அறிவியல் கொள்கை படி நாம் எதை பார்க்கின்றோமோ எதை கேட்கின்றோமோ அதை சார்ந்து தான் நம் செயல் இருக்கும், நம்முடைய அனுமதி இல்லாமலேயே நாம் பார்கின்ற காட்சிகளும், கேட்ட செய்திகளும் நம்மை ஆள ஆறம்பித்துவிடும். இதிலிருந்து

யாரும் தப்பிக்க முடியாது. பூமியைதான் சூரியன் சுத்துகின்றது என்று நாம் நினைத்து இருந்திருப்போம், ஆனால் சூரியனைதான் பூமி சுற்றுகின்றது என்பது தெரிந்தவுடன் நம்முடைய செயல், நம்மை கேட்காமல் அந்த உண்மையை சார்ந்திருக்கும். எனவே நாம் ஒழுக்கமான பாதையில் மட்டும்தான் செல்லவேண்டும். இந்த புத்தகமும் அப்படிதான் இதை படித்தவுடன் உங்கள் அனுமதி இல்லாமலே உங்களை இது வழிநடத்தும். இது அறிவியல் உண்மை இதிலிருந்து யாருக்கும் விலக்கு இல்லை.

இந்த புத்தகம் முழுவதும் ஒருவனுடைய செயலுக்கு அவன் காரணம் இல்லை என்று சொல்லிவிட்டு பிறகு ஏன் ஒரு தனிமனிதனை இப்படி இருங்கள், அப்படி இருங்கள் என்று சொல்கின்றீர்கள் அது எப்படி சாத்தியம்? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், உண்மைதான். ஒரு தனிமனிதன் தானாக செயல்பட முடியாது. இந்த புத்தகத்தை படித்தவுடன் புத்தகத்திலுள்ள செய்தி செயல்படுத்தும், அப்போது அவன் செயல்படுவான் இதில் கூறியது போல் இந்த புத்தகத்தை நான் எழுதுவதற்கும் நான் காரணம் அல்ல சமுதாயம் தான்.

நமக்கு சிந்திக்கின்ற ஆற்றல் இருக்கின்றது, எது நல்லது எது கெட்டது என்று முடிவுசெய்யும் திறமை நம்மிடம் இருக்கின்றது மற்றும் மிருகத்தைவிட ஒரு அறிவு அதிகம் உள்ளது. இந்த நிலையில் எந்தத் தவறு செய்தாலும், அதற்கு அவர் தான் காரணம் அவர் காரணம் இல்லை என்றால் அனைவரும் தவறு செய்ய ஆரம்பித்துவிடுவார்களே என்று, இந்த நூலை படித்த

சிலர் நினைக்கலாம் அவர்களுக்கு மீண்டும் தெளிவுப்படுத்துகிறேன்.

நான் என்று சொல்வதற்கு நமக்கு சொந்தமாக நம்மிடம் எதுவுமே இல்லை. உடலாக இருந்தாலும், அறிவாக இருந்தாலும் அனைத்தும் இது நாள்வரை வெளியிலிருந்து நாம் சேகரித்து வைத்ததைதான். இப்போது நான் என்று எண்ணுகின்றோம். பிறந்தது முதல் இதுவரை உங்களுக்கு கிடைத்த அனுபவம்தான் இப்போது உங்களிடம் உள்ள அறிவு. அது ஒருவருக்கொருவர் மாறுபடும். அதற்கு ஒருவர் வாழ்ந்த சூழல்தான் காரணம். அப்படி என்றால் உங்களுடைய அறிவு என்று நீங்கள் நினைப்பது உங்களுடையது அல்ல. அது சமுதாயத்துடையது. உங்கள் அறிவு உங்களை செயல்படுத்தினால் சமுதாயம் தான் உங்களை செயல்படுத்துகின்றது என்று பொருள்.

உன் செயலுக்கு நீ காரணம் அல்ல, ஆனால், நீ செய்கின்ற செயல்களின் பலன்களை நீ தான் அனுபவிப்பாய்.

ஒருவர் பள்ளம் என்று தெரிந்தும் பள்ளத்தில் விழுந்தாலும் அதற்கு அவர் காரணம் அல்ல, அவருக்கு இதுவரை சமுதாயத்திலிருந்து கிடைத்த அறிவுதான் காரணம். ஆனால் அந்த செயலின் விளைவாக ஏற்படுகின்ற நல்லதையும் கெட்டதையும் அவர்தான் அனுபவிப்பார் எனவே தான் செய்கின்ற செலுக்கு தான் பொறுப்பல்ல என்று எண்ணி யாரும் தவறு செய்யமாட்டார்கள். நம் செயலை சார்ந்துதான் நம் வாழ்க்கை உள்ளது.

ஆன்மீகவாதிகள் சொல்வார்கள் நீ செய்வதை இறைவன் மேலேயிருந்து பார்கின்றான் எனவே நீ நேர்மையாக ஒழுக்கமாக நடந்துகொள் என்று. அறிவியலில் மேற்பார்வையாளர்கள் யாரும் இல்லை, இந்த உலகில் அனைத்தும் தத்துவத்தின் அடிப்படையில்தான் இயங்குகின்றது. இதை மீறி எதுவும் நடக்காது. பந்தை பல கோடி முறை மேலே போட்டாலும் அது கீழே தான் விழும் அதுபோல் நீ செய்கின்ற தவறுகளுக்கு தண்டனையை நீ அனுபவிப்பாய் அல்லது உன் சமுதாயம் அனுபவிக்கும் என்பது உறுதி. இதை யாரும் கண்காணிக்க வேண்டியது இல்லை. பந்து எப்படி கீழே விழுந்ததோ அதுபோல இதுவும் நடக்கும். இதை புரிந்து கொண்டு அனைவரும் நேர்மையாக நடப்போம்.

# அறிவியல் ஆன்மீகம்

கடவுள் இருக்கு என்பவன் முட்டாள் அல்ல, கடவுள் இல்லை என்பவன் அறிவாளியும் அல்ல. ஆன்மீகம் இல்லை என்றால் இப்போது இருக்கின்ற கட்டுபாட்டில் கூட சமுதாயம் இல்லாமல் கொலை, கொள்ளை சமுதாயத்தில் அதிகமாகி இருக்கும். சமுதாய நீதியை இதுநாள் வரை கட்டுப்படுத்தி வருவது ஆன்மீகம் தான். அதுமட்டுமின்றி இது நாள் வரை ஒரு மனிதனுக்கு அமைதியையும், நம்பிக்கையும் கொடுத்து வருவதும் ஆன்மீகம் தான்.

கடவுள் இருக்கின்றது என்று நம்புபவர்கள், மற்றவருக்கு நாம் நல்லது செய்தால் கடவுள் நமக்கு நல்லது செய்வார் என்று எண்ணி மற்றவருக்கு உதவியும் தர்மமும் செய்தார்கள், அறிவியல் தத்துவபடி இவர்கள் செய்த நல்லகாரியங்கள் இவர்களுக்கு நல்ல பலன்களை கொடுத்திருக்கும் இதை ஆன்மீகவாதிகள் கடவுள் எனக்கு கொடுத்துள்ளார் என்று எண்ணி வாழ்கின்றார்கள். அதனால் அவர்கள் கடவுளை நம்புகின்றார்கள், நாம் அதை அறிவியல் தத்துவம் என்கின்றோம் அவர்கள் அதை கடவுள் என்று எண்ணுகின்றார்கள்.

ஆன்மீகத்தில் உள்ள மூட நம்பிக்கைகளையும், மூட பழக்கங்களையும், போலி ஆன்மீகவாதிகளையும், புறம் தள்ளிவிட்டால் போதும், கடவுள் இல்லை என்றாலும், ஆன்மீகம் சமுதாயத்தை நல்வழி நடத்தும்.

நாத்திகர்கள் கடவுள் இல்லை என்ற விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்திய போது, சமுதாயத்தில் இருந்த மூடநம்பிக்கைகளும், மூட பழக்கங்களும் பெரும் அளவு குறைந்தது, ஆனால் சமுதாயத்தில் குற்றங்கள் பெருகின காரணம் கடவுள் தான் இல்லையே நம்மை யார் தண்டிப்பது, நம்முடைய சாமாத்தியத்தில் எதை வேண்டுமானாலும் இந்த சமுதாயத்தில் செய்து நாம் பிழைத்து கொள்ளலாம் என்ற நிலைக்கு பாமர மனிதன் முதல் உயர் பதவியில் உள்ளவர்கள் வரை அனைவரும் தர்மத்தை மீற ஆரம்பித்துவிட்டார்கள் இதனால் சமுதாயத்தில் சத்தியம் என்ற வார்த்தை கூட புழக்கத்தில் இருந்து மறைந்துவிட்டது.

இப்போது அறிவியல் சொல்வதும் கடவுள் இல்லை என்றுதான் ஆனால் கடவுள் செய்வதை அறிவியல் செய்து கொண்டே இருக்கின்றது என்பது தான் புதிய பார்வை, எனவே வரும் காலங்களில் மூடநம்பிக்கை, மூடபழக்கங்கள், போலி ஆன்மீகவாதிகள் இல்லாத தர்மமும் சத்தியமும் ஒழுக்கமும் நிறைந்த மேன்மையான சமுதாயம் உருவாகும்.

# நூலின் நோக்கம்

சமுதாயத்தில் அனைவரும் சமம் என்பதை இந்தநூல் தெளிவுப்படுத்தி இருக்கின்றது. இதை ஒன்றை கடைபிடித்தால் கூட நாம் அன்பான அமைதியான வாழ்க்கையை வாழலாம், காரணம் அனைவரும் சமம் என்ற எண்ணம் நம்மிடம் இருந்தால் பொறாமை இருக்காது, போட்டி இருக்காது, அடிமைத்தனம் இருக்காது, பகட்டும் இருக்காது, பொய் இருக்காது, இவைகள் இல்லை என்றால் நம் வாழ்க்கை இனிமையாக தானே இருக்கும்.

அனைவரும் சமம் என்ற நிலைக்கு ஒரு படிமேலே சென்று அனைத்து உயிர்களும் சமம் என்று வள்ளலார் அவர்கள் கூறியுள்ளார்கள் மற்றும் திருடகூடாது, பொய் சொல்ல கூடாது. சத்தியத்தை காக்க வேண்டும், தர்மம் செய்ய வேண்டும். நேர்மையாக இருக்க வேண்டும் என்று பல சமுதாய நீதிகள் இருக்கின்றன. இவைகள் தான் மனிதனை வாழ வைத்துக்கொண்டு உள்ளது. இவைகளை கடைபிடிக்க வேண்டும் என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள் ஆனால் ஏன் கடைபிடிக்க வேண்டும் என்று தெளிவுபடுத்தவில்லை. இதனால் பலர் இதுபோன்ற வழிகாட்டுதலை பின்பற்றவில்லை.

ஒரு பொருளை மேலே போட்டால் கீழேவிழும் என்று அனைவருக்கும் தெரியும், நியூட்டன் புவியிர்ப்பு விசையை கண்டு பிடிப்பதற்கு முன்புவரை ஏன் என்று தெரியாது அதுபோல் தான் நல்லது செய்தால் நல்லது நடக்கும் கெடுதல் செய்தால் கெடுதல் நடக்கும் என்று பலருக்கு தெரியும், ஆனால் ஏன் அது நடக்கின்றது என்று தெரியாது அதை அறிவியல்

தத்துவபடி இந்த புத்தகம் தெளிவுப்படுத்தியிருக்கும் என்று எண்ணுகின்றேன்.

சத்தியம், ஒழுக்கம், உண்மை, நேர்மை போன்ற வார்த்தைகளை பயன்படுத்தும் பலரும், அதன்படி நடப்பவனும் கற்கால மனிதன், மூடர்கள் என்ற எண்ணம் இந்த சமுதாயத்தில் இருந்து போக வேண்டும்.

சத்தியம், ஒழுக்கம், உண்மை, நேர்மையை போற்றும் மேன்மையான சமுதாயம் உருவாக வேண்டும். இது தான் இந்த புத்தகத்தின் நோக்கம்.

# அறிவியல் நீதி

- அனைவரும் சமம்
- நீ சமுதாயத்துக்கு செய்ததை சமுதாயம் உனக்கு செய்துவிடும்.
- பிறருக்கு நல்லது செய்தால் உனக்கு நல்லது நடக்கும்.
- ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் ஓங்கி வாழலாம்.
- அன்போடு வாழ்ந்தால் அமைதியாய் வாழலாம்.
- நேர்மையாய் வாழ்ந்தால் நெடுநாள் வாழலாம்.
- நான் என்றால் வெறுமை, நாம் என்றால் பெருமை.
- நம்முடைய இந்த நிலைக்கு நாம் காரணம் அல்ல.
- எவரும் தண்டனைக்கு உரியவர் அல்ல.
- மனிதனை அடிமைப்படுத்துபவன் மிருகம்.
- மதத்தை சார்ந்து வாழாமல் மனிதனை சார்ந்து வாழ்வோம்.
- கெட்டதை பார்க்காதே, கெட்டதை கேட்காதே.
- உன் செயலுக்கு நீ காரணம் அல்ல. எனவே உயர்ந்தவன்,தாழ்ந்தவன் அல்ல. அனைவரும் சமம்.

- உன் செயலுக்கு நீ காரணம் அல்ல. ஆனால், நீ செய்கின்ற செயல்களின் பலன்களை நீ தான் அனுபவிப்பாய்.